**செய்தி வெளியீடு எண்:358** **நாள் : 20.07.2015**

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி 32 மாவட்டங்களிலும் இரண்டு நாட்கள் நடைபெற்ற புகைப்படக் கண்காட்சியை 4 லட்சத்து 17 ஆயிரத்து 100 பேர் பார்வையிட்டனர்.

-----

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இரண்டு நாட்கள் நடைபெற்ற புகைப்படக் கண்காட்சியினை 4 இலட்சத்து 17 ஆயிரத்து 100 பேர் பார்வையிட்டனர்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் "நாடு போற்றும் நான்காண்டு ஆட்சி, என்றும் அம்மாவின் ஆட்சி" என்ற தலைப்பில் புகைப்படக் கண்காட்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன. அரசின் திட்டங்களை மக்கள் முழுமையாக அறிந்து பயனடையும் வகையில் இப்புகைப்படக் கண்காட்சிகள் அமைந்தது. இக்கண்காட்சிகள் அந்தந்த மாவட்ட அமைச்சர் பெருமக்களால் திறந்து வைக்கப்பட்டன.

இப்புகைப்படக் கண்காட்சியில் இடம் பெற்றிருந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பங்கேற்ற அரசு விழாக்கள், முக்கிய திட்டங்கள், அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் நாட்டுக்கு உழைத்த தலைவர்களுடன் உள்ள அரிய புகைப்படங்கள் இடம் பெற்றிருந்ததை பார்வையிட்ட பொதுமக்கள், "இக்கண்காட்சி நாங்கள் பெரிதும் பயனடையும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது, இது பாராட்டுக்குரியது. மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களுக்கு வழங்கிய நலத்திட்ட உதவிகள், நலத்திட்டங்கள் போன்ற அரிய புகைப்படங்கள் ஒரே இடத்தில் காணுகின்ற வாய்ப்பு இப்புகைப்படக் கண்காட்சிகளின் மூலம் கிடைக்கப்பெற்றது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது" என்று கருத்து தெரிவித்தனர். இப்புகைப்படக் கண்காட்சியினைப் பார்வையிட்ட மாணவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால்அறிவிக்கப்பட்ட மடிக்கணினி வழங்கும் மகத்தான திட்டத்தின் மூலம் மாணவ சமுதாயம் மிகவும் பயனடைந்துள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

மேலும், இப்புகைப்படக் கண்காட்சியை முன்னிட்டு அரசின் சாதனை விளக்க வீடியோ படக்காட்சிகளும் நடத்தப்பட்டன. நான்காண்டு சாதனைகளைப் பொதுமக்கள் அறியும் வகையில், துண்டு பிரசுரங்கள், சாதனை விளக்கக் கையேடு மற்றும் குறுந்தகடுகளும் வெளியிடப்பட்டன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**